IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
OS No. 101/2023

P.W.1

| | |
|---|---|
| Name | : சிவகுமார் |
| Father/Husband Name | : கோதண்ட பாணி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 60 |
| Date | :04-06-2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2025.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை –**

1. என்னுடைய தாத்தா பெயர் நடேசன் நாயக்கர். நடேசன் நாயக்கருக்கு என் அப்பா கோதண்டபாணி, ஆனந்தன் மற்றும் கோமலம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு சொத்துகளை நான் கூட்டுக்குடும்ப சொத்துகள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தவா சொத்துகள் பூர்விக சொத்துகள் என்பதற்கான ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா அஞ்சலக துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். நானும் தபால் துறையில் வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய பெரியப்ப ஆனந்தன் மட்டும் தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் இல்லை என் அப்பாவும் விவசாயம் செய்து வந்தார்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 என் பெரியப்பா ஆனந்தன் பெயரில் கொடுக்கப்பட்ட ஒப்படைவு ஆவணம் என்றால் சரிதான். என் அப்பா கோதண்டபாணிக்கு

ஒப்படைவு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் அப்பா அப்போது இளவராக இருந்ததால் அவர் பெயரில் ஒப்படைவு ஆவணம் வழங்கப்படவில்லை. தாவா 5 மற்றும் 6 இலக்க சொத்துகளை அனுபவித்து வந்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. என் பெரியப்பா ஆனந்தன் செங்கல்பட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 358/1992 என்ற வழக்கை என் மீதும் என் அப்பாவின் மீதும் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அ.வ.எண். 358/1992 வழக்கின் வழக்குரை சான்றிட்ட நகல் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் **(அ.வ.எண். 358/1992 வழக்கின் வழக்குரை சான்றிட்ட நகல் பி.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. இந்த வழக்கின் தாவா 5, 6 இலக்க சொத்துகள் தான் அ.வ.எண். 358/1992 வழக்கு சொத்துகள் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்பட்ட பி.சா.ஆ. 1 ன் அந்த தாவா சொத்துகள் அவருக்கு மட்டுமே பாத்தியப்பட்ட என்று பத்தி 3 ல் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த வழக்கில் என் அப்பா தாக்கல் செய்த பதிலுரை என்றால் சரிதான் **(அ.வ.எண். 358/1992 வழக்கின் பதிலுரை சான்றிட்ட நகல் பி.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா 5, 6 இலக்க சொத்துகள் 3 ஏக்கர் நிலம் என்றால் சரிதான். அ.வ.எண். 358/1992 வழக்கில் என் அப்பா தாக்கல் செய்த பதிலுரையில் அந்த வழக்கு சொத்துகள் 21/09/1957 தேதியிட்ட கூர்ச்சிட்டின் படி கிழாண்டை பக்கம் 1.50 ஏக்கர் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

4. அந்த பதிலுரையின் படி மேலாண்டை பக்கம் 1.50 ஏக்கர் 1ஆம் பிரதிவாதியின் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்று என் அப்பா சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தமிழ்நாடு நில உடைமை குறிப்பேடு ஆவணம் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் என் அப்பா கோதண்டபாணி பெரியப்பா ஆனந்தன் ஆகியோருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் புல எண்கள் 272/1 மற்றும் 272/3 ஆகியவை ஆனந்த நாயக்கர் அடமானம் பெற்றது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ( **நில உடைமை குறிப்பேடு சான்றிட்ட நகல் பி.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது என் அப்பா இறந்து விட்டார் என்றால் சரிதான்.

5. நான் ஏற்கனவே அந்த வழக்கின் தரப்பினராக இருந்ததால் என் அப்பாவின் பிற வாரிசுகள் அதில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். 21/09/1957 தேதியிட்ட கூர்ச்சிட்டின் படி என் அப்பாவிற்கு பாகம் கிடைத்ததால் அதன் படி என் அப்பா அந்தசொத்துகளுக்கு முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்ய கோரி நானோ என் அப்பாவோ வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கிலும் அவ்வாறு பரிகாரம் கேட்கவில்லை என்றால் இல்லை. அந்த வழக்கில் என் அப்பா பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த வழக்கில் என் அப்பா கொடுத்த சாட்சியம் என்றால் சரிதான்.

6. என் அப்பா அந்த சாட்சியத்தில் ஆனந்தன் பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ததால் தானும் பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளார்

என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு பாக பிரிவினை கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 29 தீர்ப்புரை விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**S/d- K.Nilavarasan, 04.06.2025**

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

**DM cum JM/TPR.**